**செய்தி வெளியீடு எண்:675** **நாள்: 11.10.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.10.2017) தலைமைச் செயலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சிப்காட் தொழில் வளாகத்தில் 360 கோடி ரூபாய் செலவில் லோட்டஸ் புட்வேர் எண்டர்பிரைசஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களான பேர்வே எண்டர்பிரைசஸ் மற்றும் செய்யார் சிறப்பு பொருளாதார மண்டல வளர்ச்சி நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள காலணி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

பர்கூர் சிப்காட் தொழில் வளாகத்தில், செய்யார் சிறப்பு பொருளாதார மண்டல வளர்ச்சி நிறுவனம், அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில் நில மேம்பாடு மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் லோட்டஸ் புட்வேர் என்ற நிறுவனம் அதனுடைய துணை நிறுவனமான பேர்வே எண்டர்பிரைசஸ் நிறுவன தொழிற்சாலையை சிறப்பு பொருளாதார மண்டலமாக செயல்படுத்த உள்ளது.

இப்புதிய காலணி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்காக பர்கூர் சிப்காட் தொழில் வளாகத்தில் 146.72 ஏக்கர் நிலம், பர்கூர் சிப்காட் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலை மூலமாக சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.பி. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர். வாசுகி, இ.ஆ.ப., செய்யார் சிறப்பு பொருளாதார மண்டல வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. சுனில் தனேஜா, இயக்குநர் திரு. ரிக்கி லா, துணைத் தலைவர் திரு. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 11.10.2017**